
PR/2019/14/T



**ஜப்பான் தூதரகம்**

**இல** .20, **ஸ்ரீமத் ஆர்**.**ஜி** .**சேனானாயக்க மாவத்த**, **கொழும்பு** 7, **இலங்கை**

**தொலைபேசி** :94-11-269-3831~3 **தொலைநகல்** : 94-11-269-8629


**மின்னஞ்சல்** :cultujpn@sltnet.lk

மார்ச் 11, 2019

# ஊடக அறிக்கை

**கொழும்பு இலகு ரயில் போக்குவரத்து கட்டமைப்பை உருவாக்குவதற்காக யென் கடனின் கீழ் 48 பில்லியன் ரூபாவை வழங்கும் ஜப்பான்**

கொழும்பில் இலகு ரயில் போக்குவரத்து போக்குவரத்துக் கட்டமைப்பை நிறுவுவதற்காக யென் கடன் பொதித்திட்டத்தின் கீழ் 30,040 மில்லியன் ஜப்பானிய யென்களை ( கிட்டத்தட்ட 48 பில்லியன் ரூபா) ஜப்பானிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது. கொழும்பில் காணப்படும் கடும் வாகன நெரிசலைக் குறைப்பதும் போக்குவரத்துக் வலையமைப்பை மேம்படுத்துவதுமே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.



கொழும்பின் நிர்வாக வர்த்தக கேந்திரஸ்தானப் பகுதியையும் கொழும்பின் புறநகர் பகுதிக்கும் இருக்கும் சனத்தொகை அடர்த்திமிக்க குடியிருப்பு பகுதிகளுக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டே இந்த இலகு ரயில் போக்குவரத்து திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள இந்த ரயில் போக்குவரத்து திட்டமானது கொழும்பு கோட்டைப் பகுதியிலிருந்து பத்தரமுல்லை ஊடாக மாலபே வரையில் 16 ரயில் நிலையங்களை உள்ளடக்கியதாக 15.7 கிலோ மீற்றர்கள் நீளத்தைக் கொண்டிருக்கும். இந்ததிட்டத்தின் ஊடாக கொழும்பு கோட்டைக்கும் மாலபேக்கும் இடையிலான பயண நேரமானது கிட்டத்தட்ட 30 நிமிடங்களாக குறைந்துவிடும்.

இந்த யென் கடன் பொதியானது மிகவும் சலுகையான கால எல்லைகளையும் நிபந்தனைகளையும் ( 12 வருடகால கருணைக் காலத்தைக் கொண்ட 40 –வருட மீள் செலுத்துகைக் காலத்தையும் 0.1 % ஆண்டு வட்டியையும் ) கொண்டதாக அமைந்துள்ளதுடன் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய முகவர் அமைப்பினால் நிர்வகிக்கப்படுகின்றது.

15.7 கிலோ மீற்றர்கள் துாரத்திற்கான உயரமைக்கப்பட்ட ரயில் பாதை மற்றும் உயரமைக்கப்பட்ட ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் டிப்போவை நிர்மாணித்தல் , இலகு ரயில்கள் கொள்வனவு, மின்சார தொடர்பு சாதன மற்றும் சமிக்ஞை கட்டமைப்புக்களைப் ஸ்தாபித்தல் என்பன இந்த திட்டத்தில் உள்ளடக்குகின்றது.

பாதுகாப்பாகவும் நம்பகரமாகவும் சௌகரியமாகவும் பயணிக்கக்கூடிய முறைமையினூடாக இலங்கையின் விசேடமாக கொழும்பின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு இந்தத் திட்டம் பெருமளவில் பங்களிப்புச் செய்யும் என ஜப்பான் நம்புகின்றது.

இலங்கைக்கான ஜப்பானியத் துாதுவர் அகிரா சுகியாமாவிற்கும் திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஆர். ஏச்.எஸ் சமரதுங்கவிற்கும் இடையே இந்த திட்டம் தொடர்பான பரிமாற்றக் குறிப்புக்கள் மீது நிதி அமைச்சில் கைச்சாத்திட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய முகவர் ( ஜெய்க்கா) அமைப்பின் இலங்கை அலுவலகத்தின் தலைமைப் பிரதிநிதி புஸாடோ டனாகாவிற்கும் திறைசேரி செயலாளர் கலாநிதி ஆர். ஏச்.எஸ் சமரதுங்கவிற்கும் இடையே கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

**(முற்றும்)**

.

************************************************************

**மேலதிக விபரங்களுக்கு பொருளாதார மற்றும் அபிவிருத்தி கூட்டுறவுப் பிரிவினருடன் தொடர்புகொள்க.**

Tel: 011-269-3831~3 (ext.226)